III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.2/2012

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 06-11-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Manova | Village | : |
| Father's Name | : ஆதிமூலம் | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>நான்காவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வா.த.சா.2 ஏற்பட்ட காலத்தில் தாவா சொத்தின் சந்தை மதிப்பு எனக்க தெரியாது. சொத்து மதிப்பு தெரியாமலே ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டேனா என்றால் ஆம். எனது பூர்வீக சொத்து என்பதாகையால் ஏற்படுத்திக் கொண்டேன். வா.த.சா–2 ஐ மூன்றாம் பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்தார். வா.த.சா.2 பத்திரம் ஏற்படுவதற்கு முன்னர் ஒருவார காலக்கட்டத்தில் எனக்கு மூன்றாம் பிரதிவாதியை தெரிய வந்தது. மூன்றாம் பிரதிவாதி தாவா சொத்து குறித்து தனது பெயரில் பவர் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டிருந்த நிலையில் யாரும் தாவா சொத்தை வாங்குவதற்கு முன்வராததினால் அவர் என்னை அணுகியதன் காரணமாக எனக்கு அவர் தெரிய வந்தார். 10.02.2011 அன்று இரண்டாம் பிரதிவாதிக்கும் 4 ஆம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் குறித்தான விவரம் எனக்கு எப்போது தெரிய வந்ததது என்றால் 08.04.2011 அன்று தெரிய வந்தது. இந்த விவரத்தை நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ தாக்கல் செய்த வழக்குரையிலோ எனது பிரமாணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆகையால் இந்த வழக்கிற்காக பொய்யாக மேற்கூறிய தகவலை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதிக்கும் நான்காம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் ரூ.2,40,00,000/–த்திற்கு ஆனது என்பது எனக்கு தெரியும். தாவா சொத்தினுடைய மதிப்பு வா.த,சா.2 ன் படி ரூ.20,00,000/– தான் என்றும், அது ரூ.2,40,00,000/– அல்ல என்றும் காண்பிப்பதற்கு ஆவண ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழிக்காட்டு மதிப்பீட்டின் படி பிப்பிரவரி 2012 ல் தாவா சொத்தின் மதிப்பு ரூ.2,12,00,000/– என்றால் சரியல்ல. ரூ.2,40,00,000/– மதிப்புடைய தாவா

சொத்தை ரூ.20,00,000/-த்திற்கு எனக்க விற்பதாக ஏற்படுத்திக் கொண்ட வா.த.சா.2 ஒப்பந்தம் தவறானது என்றும் அதை நானே ஏற்படுத்திக் கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. பொதுவாக ரூ.2,40,00,000 மதிப்புடைய ஒரு சொத்தை யார் ஒருவரும் ரூ.20,00,000 த்திற்கு விற்பதற்கு ஒப்புக்கொள்வாரா என்றால், தாவா சொத்தை பொறுத்த வரை வா.த,சா.2 ற்கு 2 மாதத்திற்கு முன்னர் பவர் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்ட நிலையில் யாரும் சொத்தை வாங்க முன்வராததினால் எனக்கு அதை ரூ.20,00,000/- விற்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. நான் 1 வது மற்றும் 2 வது பிரதிவாதிகள் வைத்திருந்த கடன் தொகையான ரூ.13,00,000/-த்தை நான் அடைத்தேன். வா.த.சா.2 ல் இது குறித்த விவரம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் 1 மற்றும் 2 மாது என்பவரிடம் ரூ.9,00,000/- கடன் பெற்றிருந்தார்கள், நான் அவருக்கு ரூ.6,00,000/- கொடுத்து அடைத்தேன். இந்த விவரத்தை நான் எனது சட்டபூர்வ அறிவிப்பிலோ, வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.த.,சா.2 ல் மூன்று வருடம் கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குடும்பத் தேவைகளுக்காகவும், கடன்களை பைசல் செய்வதற்காகவும் தனது சொத்தை விற்கும் ஒரு நபர் மூன்று வருட காலம் அவகாசம் கொடுக்க வாய்பில்லை என்றும் ஆதலால் வா.த.சா.2 ஆவணம் பொய்யாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வா.த,சா.2 ல் முதலாம் மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் என்னிடம் தாவா சொத்தில் அசல் ஆவணங்களை கொடுத்ததாக குறிப்பிடப்படவில்லை. வா.த,சா.2 ஏற்படுத்தப்பட்டதற்கு பின்னர் தான் 1 வது மற்றும் 2 வது பிரதிவாதிகள் என்னிடம் தாவா சொத்திற்கான அசல் ஆவணங்களை கொடுத்தார்கள். அந்த ஆவணங்களை மார்ச் 2011 ன் போது கொடுத்தார்கள். கிரைய தொகையாக ரூ.20,00,000 வீதம் நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் வெறும் 4 சதவீதம் தொகையான ரூ.75,000 முன் தொகையாக கொடுக்கப்பட்டிருந்த நிலையில் விற்பனை செய்யவுள்ளோர் அசல் ஆவணங்களை கொடுப்பதற்கு வாய்ப்பே இல்லை என்றும் ஆதலால் வா.த.சா.2 உண்மை தன்மை கொண்டது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வா.த.சா.2 ஏற்படுத்தப்படும் போது 1 வது மற்றும் 2 வது பிரதிவாதிகள் என்னிடம் தாவா சொத்திற்கான அசல் ஆவணங்கள் தொலைந்துவிட்டதாக கூறினார்கள். அதற்கு ஆதாரமாக தாங்கள் ஒரு தினசரியில் கொடுத்த விளம்பரத்தை என்னிடம் காண்பித்தார்கள் என்றால் சரியல்ல. 1 வது மற்றும் 2 வது பிரதிவாதிகள் தங்களது எதிர் வழக்குரையில் நான் அவர்களுக்கு உறவினர் என்ற முறையில் அவர்களது வீட்டிற்கு அடிக்கடி சென்று வரும் நிலையில் தாவா சொத்திற்குரிய அசல் ஆவணங்களை நான் திருடி சென்றுவிட்டதாக

கூறியுள்ளார்கள் என்றால் அது பொய்யானது. 4 ஆம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் இரண்டாம் பிரதிவாதி அவ்வாறு தங்களது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்தை சாலை விரிவாக்கத்திற்காக ஆர்ஜீதம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 10.02.2011, 02.03.2011 மற்றும் 08.04.2011 ஆகிய காலத்தில் நில ஆர்ஜீத நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை என்றும் நான் பொய்யான தகவல்களை அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.